உ

# சண்முகநாதன்.

# SANMUKANATHAN.


பத்திர விகிதம்.

| | |
|---|---|
| உள்ளூருக்கு ஞ 1-க்கு ரூ. | 1-50 |
| வெளியூருக்கு ,, | ,, 2-00 |
| தொலோய்ப்பகுதிக்கு | ,, 2-50 |
| தனிப்பிரதி | சதம் 6 |

மாசமிருமுறை பிரகடனமாகும்.

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை போற்றியொழுகப்படும்.

விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| முதன்முறைக்கு. | ரூ.——. |
| ஒரு கலத்துக்கு | 7-50 |
| அரைக்கலத்துக்கு | 4-00 |
| காற்கலத்துக்கு | 2-50 |
| வரி 1-க்கு | —8 |
| அடுத்த முறைக்கு அரைவாசி. | |

மலர் 5. யாழ்ப்பாணம், இராக்ஷத ஞு புரட்டாதி மீ 8-உ (24—9—15) வெள்ளிக்கிழமை. இதழ் 4.


உ
குகமயம்.

*சங்கரன்றன் சால்பிறைஞ் சண்முகநா தன்பெயரோ, டிக்கெமாம் பத்திரமு மொக்காளுக—கிக்கமுடன், உன்னரிய நன்னிலைமை யுற்றெல்கும் பல்கிபட, வன்னவன்று மோதுமே யாம்.*

## கையொப்பநேயர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம்.

நேயர்காள்!

நமது பத்திர புத்திரனுக்கு நான்காம் வயது பூர்த்தியாகி ஐந்தாம் வயதும் ஆரம்பித்து நான்காம் இலக்கமும் வெளிப் பட்டுவிட்டது. இன்னும் உங்களிற் சிலர், செலுத்தவேண்டிய பத்திரகிரயத்தை யனுப்பாது மௌனஞ் சாதித்திருப்பது முறைமையாகுமா? நீங்கள் செலுத்தவேண்டிய சந்தாப்பணத்தைக் கிரமமாகச் செலுத்தாதுவிட்டால் நாம் பத்திரிகையைக் கிரமமாக நடாத்துவதெப்படி? இப்பொழுது எடுப்பித்திருக்கும் புதிய எழுத்துகள் முதலியவைகட்கு நீங்கள் கொடுக்கும் சந்தாப்பணத்தையன்றே எதிர்பார்க்கவேண்டியிருக்கின்றது. இவற்றையெல்லாம் நீங்கள் சிந்திப்பீர்களேயாயின் நன்கு புலப்படுவதோ டமையாது கிரயப் பணத்தையும் சரிவரச் செலுத்தியேவருவீர்களென்பதிற் சந்தேகமில்லை.

ஆதலால், அன்பர்களே! நீங்கள் கொடுக்கவேண்டியதொகையை இப்பொழுதே கணக்குப் பார்த்து உடனே யனுப்பி நமது பத்திரிகை தளர்வுறுவண்ணம் ஆதரித்து வருவீர்களாக

முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திரிகோணமலை முதலிய இடங்களுக்கு இப்பத்திரிகாசிரியராகிய ஸ்ரீ மு. சு. மாணிக்கம்பிள்ளை வருகிறபடியால் அவ்வவ்வூர் நேயர்கள், தத்தம் கிரயத் தொகையை அவரிடம் கொடுத்தும், வேறு கையொப்பக்காரரைச் சேர்த்தும் உதவி புரியுமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம்.

"சண்முகநாதன்" மானேஜர்.


## ஸ்ரீ வாலாம்பிகை விலாச அச்சுக்கூடம்.

சிறந்த வேலைகள்! குறைந்த கிரயம்!!

மறந்துவிடாதீர்கள்!!!

இவ்வச்சுக்கூடத்திற்கு வேண்டிய எழுத்துக்கள் முதலிய சகல சாமான்களையும் புதிதாக எடுப்பித்து, சுத்தமாகவும் கூலி குறைவாகவும் சீக்கிரமாகவும் வேலைசெய்து கொடுத்து வருகின்றோம். புத்தகவேலைகளுக்குரிய ஏராளமான புதிய எழுத்துக்கள் வந்திருக்கின்றன.

வேண்டியவர்கள் நேரிலாவது கடிதமூலமாயாவது ஒழுங்கு செய்து கொள்க.

மானேஜர்,
ஸ்ரீவாலாம்பிகைவிலாச அச்சுக்கூடம்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்




## சண்முகநாதன்.


இராக்ஷத ஞு புரட்டாதி மீ 8 உ வெள்ளிக்கிழமை


### கலிகால விபரீதம்,

. முற்றொடர்.

போலிவிவாகம்.

(——:0:——)

இனி, இக்காலத்திங்கே நடைபெற்றுவரும் விவாகங்களின் முறைகளைக்குறித்தும், இங்கே சிறிதாராயுமுகத்தால் விளக்கிக்காட்டுவாம். முழுமுதற் கடவுளாகியசிவபெருமான், பலதிறப்பட்ட ஆன்மவர்க்கங்களையெல்லாம் [illegible] முறையே [illegible] திருவுளத் [illegible] மகளை [illegible] ன்றுவுள்ளது இருஸ்தாச்சிரமமே யாம். அவ்வாச்சிரமமே விவாகஞ்செய் [illegible] தாவுள்ளதும், ஏனைய ஆச்சிரமநெறிகளை நிலைநிறுத்தற் பொருட்டுத் துணைபுரிவது மாயுள்ளதுமேயாம். அஃது இல்லாச்சிரமமெனவுங் கூறப்படும். அஃதன்றி, அறம்பொருள் இன்பங்களாகிய மூன்றற்கும் இன்றியமையாத தொன்றாய், முடிவிலே வீடுபேறடைதற்கும் நேரேவாயிலாவுள்ளதும் அஃதொன்றேயாம். அத்துணைச்சிறப்பினதாகிய அவ்வில்லாச்சிரமநிலையினையே, நமது தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும், தாமருளிச்செய்த திருக்குறள் வாயிலாக இல்லறமெனவுஞ் சிறப்பித்துக் கூறியருளினார். இல்லறமாவது, இல்வாழ்க்கைநிலைக் குரியதெனச் சொல்லப்பட்ட நிலையின்கணின்று, அதற்குத்துணையாகிய கற்புடைமனைவியோடுஞ் சேர்ந்து செய்யப்படுமறமேயாம். அஃதாவது, இல்லறநெறிக்குரிய தலைவன், முதலிலே பலகலைகளைக் கற்றுணர்ந்துகொண்டு, பின்னர் நற்குணநிறைந்த கற்பினிற்சிறந்த பெண்ணினை மணந்து, அம்மனையாளோடு கூடி அன்பையும் அருளையுந் துணையாகக்கொண்டு, இனிய மொழியோடும் இன்முகத்தோடும் விருந்தோம்பி, அரியதவத்தினரைப்பேணிப், பிரமயாகம் தேவயாகம் மானுடயாகம் பிதிர்யாகம் பூதயாகமெனப்படும் ஐவகை வேள்வியையுஞ் செய்து, இங்ஙனமேயாய நல்லதருமங்களைச் செய்துநிரப்பிப், பலவகைக் கீர்த்திகளையுநிறுத்திப், பிறர்மனைவியரை மனத்தினாலு நினைத்து விரும்பாதவனுய்த், தன்மனையாளோடும், விலக்கப்பட்ட நாட்களையொழித்து விதிக்கப்பட்ட நன்னாளினுங், காமமிகுதியாற்கலங்கி நெறிபிறழாது சற்புத்திரப்பேற்றையேகருதிப் [illegible] அறவறநிலைக்குச் செல்லும் அத்துணைச்சிறந்த மிக மேலாகிய நிலையினையுடைய அறமேயாம். அது, "நல்லறநூல்களிற் சொல்லறம்பலசில-வில்லறந் துறவற மெனச்சிறந்தனவே-யக்கிலையிரண்டினுண் முன்னதிளைப்பிற்-கற்றநூற்றுறைபோய்க் கடிமனைக்கிழவ-னற்குணநிறைந்த கற்புடைமனைவியோ-டன்புமருளுந் தாங்கியின்சொலின்- விருந்துபுறந்தரந் தருந்தவர்ப்பேணி-யைவகை வேள்வியு மாற்றியிவ்வகை-நல்லறநிரப்பிப் பல்புகழ்நிறீஇப்-பிறன்மனைநயவான் றன்மனைவாழ்க்கைக்கு-வரையாநாளின் மகப்பேறுகுறித்துப்-பெருநலந்துய்க்கும் பெற்றித்தன்றே" எனக்கலிகால வரதராகிய சுப்பிரமணியப்பெருமானது திருவருளை நேரே பிரத்தியட்சத்துப் பெற்றருளிய நல்குமரகுருபரசுவாமிக ளருளிச்செய்த அருமைத்திருவாக்கினாலும், பிற ஆன்றோர் திருவாக்குக்களினாலும் பெறப்படும். அஃதன்றி, உலகம் நடைபெறுதற்கும் இல்லறமொன்றே இன்றியமையாச் சிறப்பிற்றாய் வேண்டற்பாலதொன்றென்பதனைச், சிவபெருமானும் கருதிவழியாக விதித்தருளிய தொன்றேயுடைமையாது, தாமே தமதருட்சத்தியாகிய உமாதேவியாரைப்பாகத் தமைத்தல் வாயிலாக வெளிப்படையாலுங் காட்டியருளினர். அது, "தேவரு முனிவர்தாமுஞ் செங்கண்மாலயனுமற்றும்-யாவருமடங்கைமாசோ டில்லறத் தொழுகுந்தன்மை-மேவரப் பணித்தானன்றே விமலையோடணுகி மேனாட்-டாவரும்புவனமாகி சராசரம் பயந்ததானு" என்னுங் கந்தபுராணச் செய்யுளினாலும் பெறப்படும். இத்துணைச் சிறப்புவாய்ந்துள்ள இல்லாச்சிரமநிலை, தனி விஷயமாகப் பேசப்புகும்பொழுது விரித்து விளக்கப்படும். இனி, நாம் முதலிலே எடுத்துக்கொண்ட விஷயத்தின்மீது செல்லுவாம்.

(வரும்.)

## யுத்த நிலை.

சென்ற இரண்டு மூன்று வாரங்களா ஜெர்மனியர், ருஷியரின் தேசத்துள் முன்னேறிச்சென்றவிதமாகச் செல்லவியலாது தியங்குகின்றனர். ருஷியர் 'ராடோ' முதலிய இடங்களில் பெருஞ்சண்டைகளில் ஜெர்மானியரைப் பின்காட்டச்செய்து, அவர்களுக்குப் பெருஞ்சேதம்விளைத்து, அவர்களில் அனேகரை மறியற்படுத்திவிட்டனர். சென்ற மூன்றுவாரங்களில் ருஷியராற் பிடிக்கப்பட்டவர்கள் தொகை சற்றேறக்குறைய 40,000. இவ்வெற்றிகள், இப்போது ருஷியரிடம், தேவையான குண்டுகள், மருந்துகள், இருக்கின்றனவென்பதை நன்கு காட்டுகின்றன. ருஷிய போர்வீரர்களின் அருமையான தேசத்தையும், இனசனங்களையும், சிநேகிதர்களையும் குரூர ஜெர்மனியர்கைப்படவிட்டு நாளுக்குநாள் பின்னேறியது, ஜெர்மனிய போர்வீரர்களின் விசேஷ தைரியத்தாலன்று; ஜேர்மனியபோர்வீரரின் தொகையினாலன்று; ஜெர்மனிய சேனாதிபதிகளின் விசேஷ யுத்திகளினாலன்று; பின் எதனாலென்னில், ருஷியரிடம் போதிய மருந்து, குண்டு, பீரங்கி முதலின வில்லாமையினாலேயாம். ஆகலால், இப்போது ருஷியர் அடையும் வெற்றிகளினாலே, இக்குறை யப்பானியருடைய உதவியினாலும், தங்கள் தொழிற்சாலைகளின் கூடிய முயற்சிகளினாலும், ஆங்கிலோ பிராஞ்சியருடைய உதவியினாலும் நிவிர்தியாயிற்று என்றே காட்டுகின்றது.

இக்கவாரம் ருஷியாவிலிருந்து இங்கெட்டிய செய்திகள், மிக மும்மரமான யுத்தங்கள் போர்முனையில் அனேக இடங்களில் நிகழ்கின்றனவென்றும், ருஷியரே ஜெர்மானியரைத் தாக்குகின்றார்களென்றும் தெரிவிக்கின்றன. இவற்றையுற்று நோக்குமிடத்து, ஜெர்மனியர் இன்னுஞ் சிலகாலத்தாற் பின்காட்டவேண்டும்போலிருக்கின்றது. மாட்சிமைதங்கிய ருஷிய சக்ரவர்த்தியவர்கள் ருஷிய சேனைகளின் பிரதம சேனாதிபதியாய் விட்டனர். இதனாலும் போர்செய்யாதிருந்த போர்வீரர்களில், இருபதிலட்சம் பேர் யுத்தத்திற் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். பிராஞ்சியரும் அப்படியே பெருந்திரளான சேனையை யுத்தமுனைக்கு அனுப்பியிருக்கின்றார்கள். பனிக்காலம் எட்டுகின்றது. ஆங்கிலோ பிராஞ்சியர்கள் தங்கள் ஆயுதங்களைப் பூரணப்படுத்துகின்றனர். இப்போது நாள்தோறும் பிராஞ்சியர் ஏராளமாகப் பீரங்கிப் பிரயோகஞ்செய்து ஜெர்மனியர் அகழ்களையும், மருந்து சேர்த்துவைத்திருக்கும் சாலைகளையும் நாசமாக்குகின்றனர். இவையெல்லாம் முன்னேறுதற்கு அவசியம் தேவையான ஆயுதங்களை ருஷியாவில், சகித்தற்கியலாத குளிர்காலம்வர, பிரான்சில், ஆங்கிலோ பிரான்சியசேனைகள் முன்னேற செர்மனியர் ருஷியரைத்தாக்குஞ் சேனைகளைப் பிராஞ்சுக்குக் கொண்டுபோக, ருஷியர் ஜெர்மனியரின் தேசத்துள் முன்போலப் புகுவார்கள். அப்பொழுது தொடங்கும் ஜெர்மனியருக்குக் கஷ்டகாலம்.

ஜெர்மனிய சக்கிரவர்த்தி இதை நன்று யறிவர். இதுகாரணம்பற்றியே, தாம்வெற்றியடைந்திருக்கும் இப்பொழுதே சமாதானஞ் செய்வது நலமென்று எண்ணுகின்றனர். யுத்தத்தைத் தொடங்கியவர், அதனால்வருங் கஷ்டங்களையும் அநுபவித்தலே முறையாம்.

குறைத்தவிலைக்குக் கொடுக்கப்படும்

மகாபாரதம் ஆதிபருவ மூலமும்

## புத்துரையும்.

இவை

காண்டாவதகனச் சருக்கம் உசும் செய்யுள்வரை ஆறுமுகநாவலரவர்கள் மருகரும் மாணாக்கரும் வித்துவசிரோன்மணியுமாகிய ஸ்ரீமத். ந ச. பொன்னம்பலபிள்ளை அவர்களாலும், உஎம் செய்யுள் முதல் ஷை நாவலரவர்களுக்கும், பொன்னம்பலபிள்ளை அவர்களுக்கும், உடுப்பிட்டி சிவசம்புப்புலவரவர்களுக்கும் மாணாக்கரும், திருவனந்தபுரத்து மகாராசாகாலிசில் தமிழ், சமஸ்கிருதபண்டிதர் வ. கணபதிப்பிள்ளையவர்களுக்குச் சகோதரரும், மாணாக்கருமாகிய யாழ்ப்பாணம் பரித்தித்துறையைச் சார்ந்த புலோலி ஸ்ரீ. வ. குமாரசுவாமிப்புலவரவர்களாலும் இயற்றப்பட்ட புத்துரையுடன்.

ஆதிபருவம் } முன்விலை ரூபா க டுய தற்போது குறைக்கப்பட்டவிலை ரூபா உ டுய

சபாபருவம் } முன்விலை ரூபா உ தற்போது ,, க டுய

வேண்டுவோர்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை,

சண்முகநாதன் புத்தகசாலை,

சி. சி. சண்முகம்பிள்ளையிடம்

பெற்றுக்கொள்ளலாம்.

## சமாசாரங்கள்.

சட்டநிருபண சபை:—கொழும்பில் இச்சபையின் கூட்டமொன்று செப்டெம்பர் மீ 30உ வியாழக்கிழமைநடைபெறும்.

---

கொப்பறாவிலை:—கொப்பறா இப்போது கண்டிஒன்று ரூபா-53 சதம்-75வரையில் விலைப்படுகின்றது.

---

மலிவுசாராயத்தின் வேடிக்கைகள்:—சென்ற சிலநாட்களாக யாழ்ப்பாணத்தில் சாராயம் மலிவாகவிற்கப்படுகின்றது மலிவு விற்பனவு தொடங்கவே தவறணைகளிலும் தெருக்களிலும் வீடுகளிலும்பாட்டுக்களும் கூக்குரல்களும், கலகங்களும் நாள்தோறும் நிகழ்கின்றன. கோடுகளில் வழக்குக்களுங் கூடிக்கொண்டனவாம். குடிவகை மலிவாக விற்பதினால் எவ்வளவு தீங்குகள் விளையலாம் என்பதை இது நன்கு காட்டுகின்றது. அரசாட்சியார் இனிமேலாவது குடிவகைகளின் விலையை அதிகப்படுத்தி அதனால் சனங்களுக்குநன்மைபுரிவாரென்றேநாம் எண்ணுகின்றேம்.

---

மாங்குளம் மறியல்வீடு:—இவ்விடத்திலுள்ள மறியல் வீடு சென்ற வருஷந்தொடங்கி மூடப்பட்டிருந்தது. ஆனால் இப்போ அங்கே மறியற்காரர்கள் அனுப்பப்படுகிறார்கள். இவ்விடம் சுகத்துக்கேற்ற ஒன்றன்றே முன் இம்மறியற்சாலை மூடப்பட்டது. இப்போ அதைப் பாவிப்பதற்குக் காரணம் புலப்படவில்லை.

அறிவித்தல்.

இத்தால் சகலருக்கும் காசிப்பிள்ளை பெண் நாகரத்தினமாகிநான் அறிவிப்பது எனதுபுருஷன் எட்டுமாசகாலமாக என்னைவிட்டுப் பிரிந்திருக்கிறார் அவர் என்னுடைய சொத்துக்களை மாறுதல் செய்யும் நோக்கம் இருப்பதாக அறிகிறேன். ஆனால், நானுவது, நானும் எனதுபுருஷன் விநாசித்தம்பி காசிப்பிள்ளையும் சேர்ந்தாவது ஒருவரிடமும் நோட்டு சீட்டு முதலிய எவ்வகையாயேனும் கடன்வாங்கவில்லை என்பதை அறிவிக்கிறேன்.

இங்ஙனம்

வண்மேற்கு கா. நாகரெத்தினம்.

## யுத்தம்.

சேர்வியருடைய சேனை இப்போதுங் ல்ல ஆயத்தமுற்றவர்களாயிருக்கிறார்கள். அவர்களை மூறிய அடித்தது, துருக்கிக்கு உதவி செய்யப்புகில், ஜெர்மனியருக்கு 45000, மேற்பட்ட சேனைவேண்டும். இவ்வரசசேனை அனுப்ப ஜெர்மனியரால் தற்கால நிலைமையில் முடியாது.

இதுவரையில் வில்னா ஜேர்மனியர்வசப்படவில்லை ருஷியரது வின்ஸ்சுக்குக்கு மேற்கிலும், வடமேற்கிலும் ஜெர்மனியரைத் தாக்குகிறார்கள். ஜெர்மனியரின் குதிரைப்படை துவின்சுக்கூடாகச்செல்ல எத்தனித்தும் வாய்க்கவில்லை. ருஷியர் ஜேர்மனியரைப் பல விடங்களிலும் பின்வாங்கப் பண்ணிவிட்டார்கள். அனேகஜெர்மனியர் கைதிகளாக்கப்பட்டார்கள்.

ஜேர்மனியருடைய சுழியோடி வள்ளமொன்று ஸ்ராவங்கர் குடாவுக் கருகே ஓர் உடைவள்ளத்தால் உடைபட்டு, அதிலிருந்தவர்களெல்லாரும் கடலிலமிழ்ந்திவிட்டார்களென்று மோர்வே மீன்பிடிகாறர்கள் சொல்லுகிறார்கள்.

வில்னாவுக்குக்கிட்ட ருஷியருக்கும் ஜேர்மனியருக்கு மிடையிற் பெருஞ்சண்டை நடக்கின்றது. துவின்ஸ்சுக்கு தென்மேற்கே ருஷியர் பெரும் வெற்றியடைந்திருக்கிறார்கள். அனேக துப்பாக்கிகளும், மருந்து, குண்டுகளும் ருஷியர்வசப்பட்டன. லஸ்குக்கு வடபாகமாய அவுஸ்திரியர் பெரும் நஷ்டமடைந் திருக்கிறார்கள். எழுநூறு அவுஸ்திரியகைதிகள் ருஷியரிலகப்பட்டுக்கொண்டார்கள். அனேகர் கொல்லப்பட்டார்.

துருக்க ஜேர்மனிய சுழியோடிவள்ளமொன்று கருங்கடலில், ருஷியகப்பலாலமிழ்ததப்பட்டது.

வில்னாவுக்குக் கிழக்கேயும், தெற்கேயும் ஜேர்மனிய அவுஸ்திரியபடைகளோடு ருஷியர் சண்டைசெய்து பெருஞ்செயமடைந்தார்கள். இதில் ருஷியர் ஆயிரத்தறுநூறு சேர்மனிய அவுஸ்திரிய கைதிகளைப்பிடித்துக்கொண்டார்கள்

அவுஸ்திரியா, ருஷியரினகழிற் சென்று யுத்தஞ்செய்து தோல்வியடைந்து பின்வாங்கினார்கள். ருஷியா அவர்களைத் துரத்திச்சென்று அவர்களினகழிகளையுந்தங்கைவசப்படுத்தி, ஓட்டிச்சென்றவர்களனைவரையும் குத்திக்கொன்றும், கைதிகளுமாக்கினார்கள்.

---

## கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்கட்குப்
[பத்திராதிபர் உத்தரவாதி யல்லர்.

### சைவப்பிரசங்கம்.

——(:0:)——

நல்லூர்க் கந்தசுவாமிகோயிற் சப்பிரத்திருவிழாத்தினமாகிய ஆவணிமீ 23உ செவ்வாய்க்கிழமை யிரவு, கந்தர்மடத்துச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே, சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பிரசாரகரும் உதயபானு பத்திராதிபருமாகிய நல்லூர் ஸ்ரீமத். சு. சரவணமுத்துப்புலவரவர்களினாலே, அன்பென்னும் விஷயம் பிரபல பிரமாணசகிதமாக மிகவிரிவாகப் பிரசங்கிக்கபபட்டது. பிரசாரகரவர்கள் சித்தாந்தமுறையே அன்பை விரித்து விளக்குமுகத்தால், மாணிக்கவாசக சுவாமிகளைக் குறித்தும் திருவாசகத்தைக் குறித்தும் அன்போடு தொடர்புடையனவாகிய பல நுண்ணியவிஷயங்களை எடுத்து விரித்து விளக்கிக்காட்டிக், கண்ணப்பநாயனாரடைந்த முத்தி சித்தாந்தமுத்தியேயாமெனவுஞ் சித்தாந்தநூற்பிரமாணங்களை எடுத்தெடுத்து விளக்கிக்காட்டி முடித்தனர்.

பின்னர், உபயவேதாகமபண்டிதராகிய பிரமஸ்ரீ. ந. வே. கனகசபாபதிஐயரவர்களெழுந்து, தமது வழக்கமாகிய சாதுரிய குறிப்புரைகளினாலே சபையாரை மகிழ்வித்தனர். பின்னர், இந்துக்கலூரிப் பழைய பிரதம தமிழ்ப்பண்டிதராகிய ஸ்ரீமத். ஆ. மு. சோமாஸ்கந்தபிள்ளையவர்கள், சுருக்கமும் விளக்கமுமுற விஷயங்களை நன்றாகப் பிரசங்கித்துமுடித்தனர். பின்னர், யாழ்ப்பாண ஆபத்துக்குதவி வைத்தியசாலை இலேககராகிய ஸ்ரீமான். செ. மயில்வாகனப்பிள்ளையவர்கள், தமது குறிப்புரைகளைச், சுத்தியான தமிழ்நடையிலே நன்றாகப் பேசிமுடித்தனர். அதன் பின்னர், நியாயப்பிரமாணமாணவகராகிய ஸ்ரீமான். க. நாதனவர்களெழுந்து, பெரியபுராணத்திலே சொல்லப்பட்ட நாயன்மார்களினாலே செய்யப்பட்ட செயற்கருஞ் செயல்களை, இக்காலத்துள்ளார் பின்பற்ற முடியாது என்றும், தமிழ்வித்துவான்களிடத்தும் சித்தாந்தவித்துவான்களிடத்தும் பிறரை மதியாத கல்விச்செருக் கிருக்கவினாற், தமிழ்க்கல்வியினாலே பயனில்லை யென்றும் ஆசங்கித்துப்பேசிமுடித்தனர்.

அப்பொழுது உடனே சரவணமுத்துப் புலவரவர்களெழுந்து, சபையாரை விளித்துச், சித்தாந்த சைவத்திலே விதிமார்க்கம பத்திமார்க்க மென்னும் இரண்டு மார்க்கங்களுண்டு என்றும், அவற்றுள், விதிமார்க்கம், வைதிகராகிய நம்மவர்க்கே உரியதா மென்றும், பத்திமார்க்கம், சரியை கிரியாயோகங்களாகிய தவங்களை

முற்சனனங்களிலே செய்துமுடிந்து, விட்டகுறையினாலே வந்து பிறந்துள்ள சமுசித்தராகிய ஞானிகளுக்கே உரியதாமென்றும், சிவபோதநழுவிச் சிவபோதமொன்றினாலே முற்றாக விழுங்கப்பட்டுள்ள அம்மகான்கள் செய்வன வெல்லாஞ் சிவன்செயலேயா மென்றும், அவர்களது செயல்களை நினைத்தற்கேனும் நம்மவர்க்கு யாதும் உரிமையின்றேயா மென்றும், ஆகவே, விதிமார்க்கத்தை அனுசரிப்போர்க்குப் பத்திமார்க்கம் விலக்கேயா மென்றும், உள்வீட்டுவேலைக்காரனுக்கு வெளிவேலையு முரிமை யுடையதே யாயினும் போலப், பத்திமார்க்கத்தை அனுசரிப்போர்க்கு விதிமார்க்கமு முரிமை யுடையதேயா மென்றும், வெளிவேலைக்காரனுக்கு உள்வீட்டுவேலை உரிமையில்லாதவாறேபோல், விதிமார்க்கத்தை அனுசரிப்போர்க்குப் பத்திமார்க்கம் உரிமையில்லையேயா மென்றும், கண்ணப்பநாயனார் பத்திமார்க்கம் ஒன்றைமாத்திரமே அனுசரித்தருளியவ ரென்றும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் நம்போல்வா ரெல்லாமுய்ந்திடுமாறு விதிமார்க்கம் பத்திமார்க்கமாகிய இரண்டையு மொருங்கே அனுசரித்தருளியவரேயா மென்றும், ஆகவே, விதிமார்க்கத்தை அனுசரிப்போர் அதனை எத்துணை அதிக கடப்பாட்டோடு தவறாது செய்துகொண்டு வருதல் வேண்டுமென்றும் பிரசங்கித்துச், சபையாரெல்லாம் இனியமையும் இனியமையுமென்று மகிழுமாறு முதற்பாகத்துக்குச் சமாதானங்கூறி முடித்தனர்.

பின்னர்க், கற்றவித்துவான்களிடத்தே குற்றமேற்றுதல் தவறேயா மென்றும், இயற்கையாகவே குற்றமில்லாதபால், பாத்திரத்தின் குற்றத்தினாலே பழுதடைந்தாற்போலக், கல்வியுந், தான் சேர்ந்த மாந்தரது குணத்தினாற் பழுதடைய தேருமேயன்றி, அது இயற்கையே யாகக் குற்றமுடையதன்றேயா மென்றும், நுண்ணிய விவேக முடையரே யாயினும், முற்செய்த தவமொன்றிலரே யாயின், அவர்க்குச் சித்தாந்த நுணர்ச்சி ஒருஞான்றும் வரவேமாட்டாதென்றும், அங்ஙனமாய தவமுதிர்ச்சியில்லாதாரே சித்தாந்த நூலறிவுடையார்மீதபவாதமேற்றத் துணிபவரே யாமென்றும், இக்காலத்துச் சித்தாந்த நூலறிவுடையார் மிகச்சிலரேயாதலிற், சமயமிதுவாதென்றறியாது சனங்களெல்லாம் நேர்ந்தவாறு நடந்து கெட்டலைகிறார்களென்றும், அதுநோக்கியன்றோ தாயுமான சுவாமிகளும் "உலகவர்பன்னெறி யெனக்குப்பெருக்கமோ சொலாய்மௌனசற்குருவேபோற்றின் பொன்னடிப்போதே" என்றும் அருளிச்செய்தாரென்றும், சித்தாந்தசமயவிடயங்களைப்பிரசங்கிப்பதேயன்றி அதன் இரகசியங்களைச்சபைகளிலேபிரசங்கிக்குமாறு விதிக்கும் விதியாதுமில்லையேயா மென்றும், நித்தியாநித்திய உணர்வுதோன்றிப் பிறவிக்கஞ்சி வீடுபேற்றின் அவாமிகவுடையராய் வரும் அதிகாரிகளுக்கேயன்றி யேனையோர்க்கொருகாலத்தாவது அவற்றைப் போதிக்கக் கூடாதென்றும் அதிப்பிரபல பிரமாண சகிதமாக விளக்கிக்காட்டிச், சித்தாந்த ரகசியங்கள் அபக்குவர்க்குப் பயன்படமாட்டா தென்பதைத், தணிகைப் புராணத்து இராமனருள்பெறு படலத்துச் சரித்திரத்தை எடுத்து விளக்கிக்காட்டுமுகத்தால் எவ்வெவருள்ளங்களிலும் எளிதே பதியுமாறு பிரசங்கித்து, இரண்டாம்பாகத்துக்குஞ்சமாதானங்கூறி முடித்துச், சுத்தாத்துவித சைவ சித்தாந்த மகத்துவத்தை இயைபுள்ள காலத்திலே தாம் பிரசங்கிக்குமாறு உத்தேசித் திருக்கின்றோமென்றுங் கூறி முடித்தனர். பின்னர்த், தமிழ்வேதபாராயணத்தோடுஞ் சந்தன தாம்பூல உபசாரணைகளோடும் பதினொரு மணி வரையிலே பிரசங்கஞ் சமாப்திபெற்றது.

இங்ஙனம்,
மு. வேதநாயகம்,
உபாத்தியாயர்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவவதார விசாரம்.

சிவபெருமானை வழிபட்டு முத்தியடைந்த நாயன்மாராகிய திருத்தொண்டர் அறுபத்துமூவருள் விசிட்டராய் விளங்குபவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். அவர் அடியார் குழாத்துள் ஒருவரென்பது "தில்லைவாழந்தணர்த மடியார்க்குமடியேன்" என அடியெடுத் துரைத்தருளிய தியாகேசப் பெருமானுக்கும், சுந்தரமூர்த்தி நாயனாருக்கும், திருநாரையூர்ப்பொல்லாப் பிள்ளையாருக்கும், நம்பியாண்டார் நம்பிகளுக்கும், "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுத்தருளிய நடராசப்பெருமானுக்கும், சேக்கிழார் நாயனாருக்கும், திருநாவுக்கரசு நாயனாருக்கும், உமாபதிசிவாசாரியசுவாமிகளுக்கும், சிவஞானமுனிவருக்கும், ஆறுமுகநாவலர் சபாபதி நாவலர் முதலிய இக்காலத்திருந்த வித்துவான்களுக்கும் அறிவுடையோர் பலருக்கும் ஒத்த துணிபாம்.

அருணகிரிநாதர், சிதம்பர சுவாமிகள், சீகாழிப் புராணமுரைத்தார் முதலாயினோர் அத்தொண்டரைச் சுப்பிரமணிய அவதார மூர்த்தியென்பர்.

அறியாதார் இவ்விருதிறத்தாரையுந் தம்முண் முரண்படுவ போலுமென மயங்கி, அந்நாயனார் பசுப்பொருளாவர் என ஒரு சாராரும் பதிப்பொருளாவர் என ஒருசாராருமாய் வாதித்து இடர்ப்படுவர். அறியவேண்டுவனவாய விஷயங்கள் பலவேதிருப்ப இதிற்றலையிட்டு அரிய சாத்திர மர்மங்களை உலகில் வெளிப்படுத்தி அறிவிலா மாந்தர் தடுமாற்றமடையவும் பத்திநிலை குன்றவும் விபரீதக் கிராகியம் செய்யவும் வைத்தல் அவ்விருதிறத்தார்க்கும் மரபன்றாம்.

இவ்வாதத்தில் நுழைபவர் சிவம், சத்தி, பதி, இலயம் போகம் அதிகாரமென்னும் அவஸ்தையினின்ற சிவன் சதாசிவன் மகேசுர என்னும் சொரூப தடத்த நிலைகளையும், பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை, ஆரணி சனனி ரோதயித்திரி என்னும் சத்திபேத நிலைகளையும் முதற்கண்ணே உணர்தல் வேண்டும். அநந்தாதி அட்டவித்தியேசுரரும், ஸ்ரீகண்டாதி நூற்றுப்பதினெட்டு உருத்திரரும் இவ்வியல்பினரென்பதையும் உணர்தல் வேண்டும். சுத்தமாயையிலே கிருத்தியஞ் செய்பவர் யாவர்? அசுத்தமாயையிலே கிருத்தியஞ்செய்பவர் யாவர்? என்பதையும் உணர்தல் வேண்டும். சிவத்தினது உண்மை வடிவம் யாது? உபசாரவடிவம்யாது? அதிட்டானவடிவம் யாது? என்பவற்றையும் உணர்தல் வேண்டும். சிவன் சதாசிவன் மகேசுரன் என்னும் வடிவின் திருமேனிகள் எதனால் ஆயின என்பதையும், அனந்தாதிகளது சரீரமும், ஸ்ரீகண்டாதிகளது சரீரமும் எவற்றால் அமைந்துள்ளன என்பதையும் உணர்தல் வேண்டும். சம்புபக்ஷ அணுபக்ஷ அதிதெய்வங்களென வழங்குவதன் இரகசியங்களையும், மகேசுரபேதமாகிய சோமாஸ்கந்தமூர்த்தத்தில் அமைந்த கந்தமூர்த்திக்கும், வாதுளாகமத்தில் ஓதியவாறு அநந்ததேவராது மார்பிற்றோன்றிய கந்தமூர்த்திக்கும், கந்தபுராணத் துரைத்தவாறு கைலாசபதியினுடைய நெற்றிநாட்டத்துதித்த சரவணபவ கந்தமூர்த்திக்கும் உள்ள வடிவபேதங்களையுணர்தல் வேண்டும். முருகக்கடவுள் சூரனுக்கும் பதுமனுக்கும் சாபஅருள் செய்ததும் சூரபன்மனைச் சங்கரிக்குமாறு திருவவதாரஞ் செய்ததும் சங்கரித்ததுமாகிய நிகழ்ச்சிகளுக்குச் சமாதான முணர்தல் வேண்டும்.

பதியாவது யாது? பதிவர்க்கமாவது யாது? திருஞானசம்பந்த அவதார சுப்பிரமணியர் பதியோ, பதிவர்க்கமோ? சம்புபக்ஷ அதிதெய்வமோ? அணுபக்ஷ அதிதெய்வமோ? புவனபதியோ? புவனபதியின் அருளிற்றங்கிய சாயுச்சிய பதமுத்திப்பேறடைந்தவரோ? சாரூப சாமீப சாலோக பதமுத்தியுட்பட்டவரோ

இப்பேதங்களுள் மானுடவடிவில் அவதாரஞ் செய்து குருவருள் பெற்று, அபரஞான பரஞானங்களை ஒரேகாலத்து ஒருங்குணர்ந்து சீவன்முத்தராய் மெய்யடியார் குழாத்துட்பட்டு அறுபான்மும்மை நாயன்மாருள் ஒருவராய்ச் சைவ பரமாசாரியராய் அற்புதங்கள் பலசெய்து வைகாசி மூலதினத்திலே திருமணநல்லூர்ச் சிவாலயத்துத் தோன்றிய சோதியில் ஐக்கியமாந் தன்மையைச் சித்தித்துப்புகுந்து "போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி யுடனானார்" பேரானந்தவாழ்வு பெறுதற்கியைந்த சுப்பிரமணியர் யாவர்? என உண்மையை நாடி, வேதாகமபுராண வுரைகட்கும் அருணகிரிநாதர் முதலிய அருளாளர் திருவாக்குகட்கும் ஆன்றோர் கருத்துக்கும் இயைந்தொருபொருளைக்கொண்டு, அவ்வுண்மையைத் தாமும் உணர்ந்து உலகத்தருக்கும் உரைத்தல்வேண்டும். அங்ஙனம் செய்தலே அறிவுடைமைக்கு அழகாம். இயலாதாயின், விதண்டைபேசிப் பழிபாவங்கட்கு ஆட்படாது அடங்குதலும் மிக அழகாம்.

கொழும்பு 26-8-15 } இங்ஙனம், சி. செல்லையாப்பிள்ளை

## சைவப் பிரபுக்களுக்கு.

—(:0:)—

கல்வியறிவாற்சிறந்த சைவப் பிரபுக்களே!

இங்கே நாமெழுதும் விஷயங்களைத் தயைகூர்ந்து சிறிது கவனித்து வாசித்து உற்றுயோசித்து, உங்கள் அபிப்பிராயங்களை வெளியிடுமாறு உங்களை அன்போடு வேண்டுகின்றோம். சைவசமயிகளாகிய எல்லார்க்குமுரிய பொதுப்பொருளாகிய சைவப்பிரகாச யந்திரசாலையையும், இந்துசாதன பத்திரிகையையும் சைவபரிபாலனசபையார், தங்கீழுள்ள வேலைக்காரரைக்கொண்டு நடப்பித்துக்கொண்டுவரும் முறைகேடுகளை எடுத்து விரித்து விளக்கிக்காட்டி, நாம் சென்றபத்திரிகைவாயிலாக, நடுநீதி குன்றாதவாறு வெளிப்படுத்தியிருப்பவைகளை நீங்களெல்லாங் கண்டிருப்பீர்களே. அதுவாயிலாக நாங் கேட்டிருக்குங் கேள்விகளுக்குத் தக்கபடி விடைகூறவேண்டியதே சபையார்க்கு முறையேயாகவும், அவர்கள் "மௌனம் அர்த்தாங்கீகாரம்" என்றவாறு வாளாபேசாது மௌனமுற்றிருக்க, வேதனத்தின்பொருட்டு வேலைக்குப் புகுந்த அவர்களது வேலைக்காரர், "கூலிக்கு மாரடிக்கப்புகுந்து எல்லைக்கு வழக்குப்பேசத் துணிந்தவாறு" நம்மீது வழக்கு வைக்கப் போகின்றோமென்று எழுந்து ஆவேசப்பட்டோடித்திரிதல் நீதியாகுந்தானோ?

நீதித்தலம் யாருக்குமுரிய ஒருபொதுவான இடமே யாமன்றோ! அங்கே சென்று வழக்குத்தொடுக்கத் துணிபவரைத் தடுப்பா ரொருவரு மிலரேயாம். தமக்கு வருவாயொன்றுமாத்திரம் வரின், வெற்றிபெற்றாலுஞ் சரி தோல்வியுற்றாலுஞ் சரி, எற்பட்டு வழக்குப் பேசுதற்காகப் பிரதிவக்கத்தர்கள் எப்பொழுதும் ஆயத்தமாகக் காத்து நிற்கின்றார்கள். தாங்கள் செய்துவருவது முழுதுஞ் சரியேயாமென்றும், நாம் கேட்ட கேள்விகளெல்லாம் பிழையேயா மென்றும் உள்ளபடி அவர்களுக்குப் புலப்பட்டிருந்தால் அவர்கள் வழக்குவைப்பதற்குத் தடையென்னை? அங்ஙனமேயாயின், முந்திய பத்திரிகைகள் வாயிலாக நாம் அவர்களை நோக்கி வினவிய வினாக்களுக்கொன்றற்காவது யாதும் விடைபுகலாது மௌனமுற்றிருந்தமைக்குக் காரணமென்னை? இப்பொழுதுதான் அவர்களுக்குப் புத்தி வந்ததா? இனி, நீதாசனத்தின் முன்னர்த்தான் நமது கேள்விகளுக்கு விடைகூற வேண்டியதாகுமா! தருமதத்துக்கென்று உபகரிக்கப்பட்ட பொதுப்பொருளுக்கு வரவு செலவுக் கணக்குக்களை வெளியிடாது இரகசியத்து வைத்திருப்பது முறையீனமேயாமென்றும், ஆதலின் அதனை வெளியிடல் வேண்டுமென்றும் நாங் கேட்கவந்தோமேயன்றி, அவர்களது சுவார்ஜிதப்பொருள்களின் கணக்குக்களைக் கேட்குநோக்கமாக நாம் வரவில்லையே. கேட்டவைகளுக்கேற்றவிடையைச் சுருக்கமாகவேனும் வெளிப்படுத்தி விடுதற்குப் பிரியாதச், சமயாபிமானமொன்றே காரணமாகவெளிப்பட்டநம்மீது கோபாவேசங்கொண்டு வழக்கு வைக்கப் போகின்றோமென்று வீண்வார்த்தைகள் பேசிக்கொண்டுதிரிதல் அழகல்லவே. பொதுவிஷயமாக நாம் நடுநிலைபேச வந்தோமேயன்றி, அவர்கள் நம்மீது கோபாவேசங்கொண் டெழுந்து கெடுதிசெய்யப் போகின்றோமென்று துணியுமாறு நாமும் சிறப்புவிஷயமாக அவர்களது சுவந்தேட்டங்களுக்கு யாதும் இடையூறுசெய்யத் துணிந்து வரவில்லையே. பின்னர் அவர்களுக்கித்தக் கோபமேன் கிளம்புவான? கோபமாவதென்னை? விரும்பியது தடைப்பட்டவிடத்தெழும் மனக்குழப்பமன்றோ கோபம்! ஆகவே, தாம் விரும்பியபடி, வரவு செலவுக் கணக்குக்களை வெளியிடாது வைத்திருப்பதே அவர்க்கு விருப்பமே யாகவும், அதற்கு மாறாகவே அக் கணக்கைக் காட்டவேண்டுமென்று நாம் நெருக்கிக் கேட்டதுதான் அவர்க்கு மனக்குழப்பமேயாயிற்று. அதற்கு நாமென் செய்வோம்!

இனி, அவர்களது வழக்குவிஷயத்தைக் குறித்தும் இங்கே சிறிதாராய்வாம். சபையார்களினாலே நடப்பிக்கப்பட்டுவருஞ் சபையினது பெயரென்னை? சைவபரிபாலன சபையோ அன்றோ! அதற்குப் பொருளுபகரித்தவர் யாவர்? சைவசமயிகளென்றுள்ளார் யாருமோ அன்றோ! ஆகவே, அச்சபை, சைவசமயிகளாகிய எல்லார்க்கும் பொது உரிமையாக உள்ள தொன்றேயா மென்பது நன்றேயாகப் புலப்படுகின்றதேயா மன்றோ! பின்னர், அதன் வரவு செலவுக் கணக்குக்களை நாங் கேட்பதற்குத் தடையென்னை? இனிச் சைவசமயிகளாகிய எல்லவர்க்குமாக வன்றோ சைவபரிபாலனசபையார் நியமிக்கப்பட்டனர். ஆகவே, சைவசமயிகளென்றுள்ளாரெவர், எதனைக் கேட்கத் துணியினும், அதற்கு அவர் தடையின்றி விடைகூறவேண்டிய கடப்பாடு பூண்டுள்ளவரேயாம். சபையாரது கட்டளைக் கமைந்திருந்து, அவரேவிய கருமத்தை மாத்திரமே செய்துமுடித்தலொன்றேயன்றி, வேலைக்காரருக்கு வேறோரதிகாரமுமில்லை யென்பது, சபைவிதானங்களை அறியவல்லா ரெவர்க்குந் தெரியுமே. ஆகவே, வழக்குக்கிடமிருப்பதாகவே வைத்துக்கொள்ளினும் வழக்கு வைப்பவர் யாவர்? கூலிக்கு வேலைசெய்யவந்தவர்கடாமா யசமானராகி வழக்குப்பேசப் புறப்படுபவர்? இல்லையே. பின்னர்ச் சபையாரன்றோ வழக்கு வைக்க வேண்டியவர்கள்! இங்ஙனமேயாகவும் அவ்வேலைக்காரர், தங்களுக்கும் யாதோ அதிகாரம் இருக்கின்றதென்றாற்போல விளங்கிக்கொண்டு, தாம் வழக்கு வைக்கப்போகின்றோமென்று ஆவேசப்பட்டு ஓடித்திரிதல் கலிகாலவிபரீதமேயாம்.

தங்கள் வேலைக்காரராகிய பத்திரிகைகாரர் இங்ஙனமேயாய கெடுதிகளையெல்லாஞ் செய்துகொண்டுவருதலைக் கண்டு சகிக்கலாற்றாத மனவருத்தத்தினாலே நாங் கேட்ட கேள்விகளுக்கு விடை யாதும் புகலாது சபையார் வாளா இருப்பப், பின்னரும் அவ்வேலைக்காரரே மிக்கதுணிவோடு சிறிதளவு தஞ்சாரதெதிர்த்து நின்று, தாஞ் செய்த குற்றங்களையு மொருபொருட்படுத்தாது வழக்கு வழக்கு என்று கூக்குரற் செய்துகொண்டு திரியுமாறிடங்கொடுத்து, வாளா கண்மூடிக்கொண்டிருக்கும் அவர்களது செறியை, நீங்களாவது கவனித்து ஒரு முடிவெடுத்துத்தருமாறு உங்களை அன்போடு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்:
சு. சரவணமுத்துப்பிள்ளை,
உதயபானு பத்திராதிபர்,
நல்லூர்.

## தான்தோன்றீசுவரன் கோயில் தண்டேசுவரப் பிரதிட்டையின் வினா.

பிரதிட்டாகுருவே!

1—நீர் செய்த பிரதிட்டை என்ன ஆகமத்தைக்கொண்டு செய்துமுடித்தீர்?

2—பிரதிட்டையாவது என்ன? அதற்காக வேண்டிய அங்கங்களென்ன?

3—இப்பிரதிட்டைக்கு யாகம் எவ்விடம் வைத்தீர், மகாயாகம் வைத்தீரா? அப்படியாயின, அது எவ்வாறு வைத்தீர்? நாடிசந்தானம் எவ்வாறு செய்தீர்?

4—ஜலாதிவாசம் முதலிய கிரியைகள் செய்தீரா?

5—நீர், கோயில் மனேசரையும்-அர்ச்சகரையும்-ஊரவர்களையும்ஏமாற்றினீரா? அல்லது கும்பங்களை ஏராளமாய்வைத்து உமது வரும்படியை மாத்திரம் கருதிச் செய்தீரா?

6—மூர்த்தியை நாட்டிப்போட்டு ஒரு இடத்தில் கும்பங்களை வைத்துப்போட்டு வாய்க்கலம்பண்ணி சனங்களை ஏமாற்றிக் காசுபறிக்க முயன்ற குருவே! யாழ்ப்பாணத்தில் எத்தனைகோயில் பிரதிட்டை பண்ணினீர்? எத்தனைகோயில் உமக்கு உண்டு?

7—நீர் பரம்பரைக் குருவா? அல்லது புதுக்குருவா? வன்னி நாடானபடியால் உமது புளுடா பலித்தது, இதை எல்லா இடத்திலும் விடாது. இதுகளுக்குச் சரியான பதில் தர வேணும். இது பொதுவிஷயமான படியால் யாவரும் கவனிக்கவேணும்.

(இன்னும் வரும்.)
இங்ஙனம்,
சிவதாசன்.

# விளம்பரங்கள்.

## டைனமைற் வெடி

என்னிடத்தில் திறமான கழுகு மார்க்கு போட்ட டைனமைற் வெடி விலைக்கிருக்கிருக்கிறது. விருப்ப முள்ளவர்கள் என்னிடத்தில் வந்து விலை விபரம் முதலியவற்றை யறிந்துகொள்ளவும்.

இங்ஙனம்
த. சினனத்தம்பி.
டைனமைற் வெடி வியாபாரி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்

## இந்தியாவில் பெரிய வேலைச்சாலை, பிஜோலிபுளுட் ஆர்மோனியம்

றிஜிஸ்றேட் நம்பர் 116, 3 வருஉத்தரவாதம்.

இந்த ஆர்மோனியம் எங்கள் வேலைச்சாலையில் கைதேர்ந்த அனுபவசாலிகளால் எங்கள் மேற்பார்வையில் செய்யப்பட்டது, பெரும்பாலும் தேக்கமரத்தினுற் செய்யப்பட்டிருக்கிறது. மற்றச்சாமான்கள் முதற்றரமானவைகளாய்ப் பரிசிலிருந்து அழைப்பிக்கப்பட்டிருக்கிறது. நல்ல தொனியும் இனிமையுந் திறமுமானதென நாங்களுத்தரவாதஞ்சொல்லுகிறோம். கற்லாக் இலவசமாய் அனுப்பப்படும்.

பழகுகிற புளூற் ரூபா 15.

| | | | | |
|---|---|---|---|---|
| 3 ஒக்றேவ் 1 செற்றிட் | | | | |
| | ,, 3 ஸ்றப் | | ரூபா | 17-20-25 |
| 3 | ,, 2 ,, | 4 | ,, | 26-30-35 |

மடிக்கக்கூடியதும் காலாலும் கையாலும் பாவிக்கக்கூடியதும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 3 ஒவ்றேவ் செற்றிட் | | | | |
| | 3 | ஸ்றம் | ரூபா | 40-45-50 |
| 3 | ,, 2 | ,, | ,, | 60-65-70. |

ஆடர் அனுப்பும்போது முற்பணமாக ரூபா அனுப்பவேண்டும். வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு கொடுக்கப்படும்.

S. கெஷிம் அன்கம்பனி
426–ஹறிசன்றேட்,
C. P. கற்குத்தா.

## ஐவான்சூறணம்.

சீரணிக்கச் செய்யும் மருந்து

(1.) மின்சார தத்துவத்தால் பக்குவப்படுத்தப்பட்டதும், சமுசாரிகளுக்கு மிகப் பிரயோசனமுமானது.

(2.) எதுவிதமான அசீரணக்குழப்பமும் அற்றுபோம். சாப்பிட்டதின்பின், தினமும் இச்சூரணக் குளிகையில் ஒவ்வொன்று உட்கொண்டுவந்தால் அசீரணம் ஒருபோதும் வராது.

சூறணம் விலை—100 (செப்பு ஒன்றுக்கு அணு 8. தபாற்செலவு அணு 3. 3-செப்பிற்கும் தபாற்செலவு இதுவே.

**S·KESHIM & CO,**
BIJOLEE FLUTE MANFACTURER
42-6 HARISON ROAD
**C.P CALCUTTA**

## நோட்டீஸ்.

கனவான்களே,

அடியில் கையொப்பம் போட்டிருக்கிற என்னிடத்தில் விலை சரசமாயும், இனுசுகள் சோட்டமாயும், அழுத்தமுள்ளதாகவும் கிடைக்கும். ஜரிகைவேலைமானஞ்செய்த பீதாம்பரசேலைகள், வேஷ்டி 10×6 வேஷ்டிகள் 7, 8-முழம் குழந்தைகள் பச்சானு, சச்சவுக்கம், உறுமால், இலேஞ்சு இவைகளும், காசிவயிரவர்சயிறு, குழந்தைகள் விளையாடும் பித்தளை விளையாட்டுச் சாமான, ருத்ருக்ஷமாலைகள், மடிதாவனிகள், கான்பூர் போர்வைகள் இவைகளெல்லாம் ஆர்டர்படி சப்ளை செய்யப்படும் இன்னும் காசியில் கிடைக்கக்கூடிய சகல சாமான்களும் ஆர்டர்படி சப்ளை செய்யப்படும். கூடிய சீக்கிரத்தில் கிரய ஜாபிதா வெளியாகும்.

இப்படிக்கு,
தங்கள் அன்பன்,
சர்மா அண்டுகோ,
அனுமான் காட்,
ஸ்ரீகாசி.

## அசாதி ரோகங்களுக்குப் பிரதிக்ஷ ஔஷதம

இப்போது கொஞ்சககாலமிருந்து உத்தமபூமியாகிய காசிநகரத்திற்கு சமீபம் பாகிரதி கங்கை ஓரத்தில் நமது ஜன்மபூமியாகிய கான்பூர்நகரத்தில் நமது புத்திரன் புத்திரி பந்துஜனங்களுக்கு நன்றாய்க் கற்றுக்கொடுத்து நல்ல அனுபோகஞ்செய்து லோகத்தில் நம் நாமம் நிலைநாட்ட வேண்டுமென்று ஆவலாகி கான்பூரில் ஆதிஆயுர்வேத அரோகசுதாகர் வைத்தியசாலை வைத்திருக்கிறேன். அதற்காக நம் மருந்தாவதுசரி நம் புத்தகமாவதுசரி வேறு வாசனைத் தைலங்களாவதுசரி ஜரிகை பீதாம்பர பட்டுச்சால்வைகளும் பனாரஸ் சேலை முதலிய அனேக வஸ்துகளும் வேண்டிய வஸ்துக்கள் நம்மிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் ஓர் பெரிய ஆனந்தம்.

"பரமசிவனின் ஜடாவிலிருக்கும் கங்காதேவி பாகிரதி மெத்தக் கடினமாய்த் தவஞ்செய்து சிவனிடம் மன்றுடிக்கேட்டார் அப்போது சிவன் ஜடாவிலிருந்து ஒருசொட்டு கங்காசலம் சிவன் கருணைகூர்ந்து விட்டார் அந்த ஒருசொட்டில் மூன்று கங்கை உண்டாகினது ஒன்று ஆகாசத்திற்குப் போனது ஒன்று பாதாழலோகத்திற்குப் போனதுஒன்று பாகிரதிமஹாராஜன் மிர்த்துலோகத்தில் ஜனங்களுக்கு நன்மைக்காகக் கொண்டுவந்தார் மஹாராஜ சகர்ருள்ள 60 ஆயிரம் புத்திரர்கள் கபிலமுனிவர் சாபத்தினுல் சாம்பலாகிவிட்டார்கள் அவர்களுக்கு மோட்சம்கொடுக்க வேண்டுமென்றுதான் பாதாழத்திற்குக் கங்கைபோனது மிர்த்துலோகத்திலுள்ள கங்கையிலுள்ள ஜலம் பாவிகளுக்கு ஒருசொட்டு முகத்திற்பட்டால் பாவம் நீங்கி மோட்சமடைவார் அதிகம் எழுதவேண்டியதில்லை. அதிகம் அறியவிரும்புவோர் புராணங்கள் இராமாயணம் பார்த்துக்கொள்ளலாம். இது அனேக இலங்கைவாசிகளுக்கு அகப்படாததினுல் யான் கருணைகூர்ந்தது. யான் கங்கைக்கரையோரத்தில் இருக்கிறதினுல் நம்மிடம் மருந்து எடுக்குஞ் சகோதரர்களுக்கு மருந்துப்பார்சலோடு சிறிய சீசா ஒன்று இனுமாய் அனுப்பப்படும்,

## சாதாவரி லேகியம்.

இந்த மோதகம் உத்திரகண்டத்தில் பத்திரிநாத ஆசிரமத்தில் ஓர் மஹாமுனிவர்வந்தார். அவர் லோகஜனங்களின்மேல் கருணைகூர்ந்து வெனனில் தற்காலம் ஜனங்கள் அதிகமாய் மதுபானம் புசிக்கிறதினுல், அனேகம்பேர் சாராயம் அனேகம்பேர் கஞ்சா அபின் இவ்விதமாய் அனேகவித மதுபானஞ் சாப்பிட்டு கஷ்டமடைவது தெரிந்து சாஸ்திரத்திலிருந்த பிரகாரம் இந்த லேகியத்தை நமக்கு உபதேசித்தார், மெத்தச் சீக்கிரம் தேசநன்மைக்காக வெளிப்படுத்தும்படி உத்தரவு கொடுத்தார், இந்த லேகியம் சாப்பிட்டால் கஞ்சா சாப்பிடவேண்டியதில்லை, இந்த லேகியம் அதிலும் பார்க்கக் குணமுடையது. சாராயம் குடிப்பவர் இந்த லேகியம் சாப்பிட்டால் சாராயத்தினுடைய குணம் கொடுக்கும். அபின் சாப்பிட்டதினுல் என்னகுண மிருக்கிறதோ அந்தக் குணம் இந்த லேகியம் கொடுக்கும் இதுக்கு மேற் குணங்களிருக்கிறது அதுதவிர மூலக்குடு, இருமல், கைகால்வலி, இடுப்புவலி, வயிற்றுவலி, ஸ்திரீகளுக்கு கெற்பவாய்வு போன்ற ரோகம் 20-வகை பிரமேகம், நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீரதிகமாய்ப்போகுதல், ஆண்தன்மை யற்றவர்களுக்குக் சக்தியைக் கொடுக்கு மேற்சொல்லிய வியாதிகளும் நிவிர்த்தியாகும். 84-வகை வாய்வு சூரியன்கண்ட பனிபோலநீங்கிவிடும். மலசலஞ்சுத்தமாகி நல்லபசியை யுண்டாக்கி இரத்தவிர்த்தி யுண்டாகி 7 வகைத்தாது அதிகப்படும். இந்த லேகியத்தில் அபின் கஞ்சா யாதொன்றுஞ் சேர்க்கப்படவில்லை. ஆயினும் அலமாம் ஜடாசக்காய் முதலிய இப்படி மருந்துகள் சாப்பிட்டால் சக்தியைக்கெடுத்து அபின கஞ்சாவிலுள்ளகுணம் கொடுத்து அதுகள் சாப்பிடவிருப்பமில்லாமலும்போகும், மேலுக்கு ஒரு கெடுதியும் சேரியாது, கெட்டுப்போனசக்தி திருப்பக்கொடுக்கும். இது ஆண் பெண் இருவருள்ளும் பாவிக்கலாம், வியாதியில்லாதவர்கள் இந்த லேகியஞ் சாப்பிட்டால் மலஜலசுத்தி பசியதிகப்பட்டுப் போசனம் நல்லாய்ச் சாப்பிடலாம். அதினுல் நல்ல இரத்தசுத்தி யுண்டாகிச் சத்தியதிகப்படுத்தும் எவ்வளவு மாச்சல்ப்பட்டாலும் சரீரத்திற்கு வருத்தம் தெரியாது. இராத்திரியுன் அதிகம் கனமூய்க்கொடுக்கும் ஒருபத்தியமுமில்லை, கனவான்களும் ஏழைச்சனங்களெல்லாம் சாப்பிடவேண்டுமென்று எண்ணி நானதிகம்சயம்வைக்காமல் உலகநன்மைக்காக மெத்தச் சகாயமாய் வெளிப்படுத்தினேன். லேகியத்தின் விலை ஒருறூத்தல் ரூபா 8. கால்றூத்தலுக்குக் குறைய அனுப்பப்படமாட்டாது. கால்றூத்தல் இருந்தாலுஞ்சரி அரைறூத்தல் இருந்தாலுஞ்சரி தபாற்செலவு பேய்க்கின்சார்ஜ் இனும்.

இனிமேலெடுக்கும் கனவான்கள் கொழும்புக்கு எழுதவேண்டாம். எனெனில் கொழும்பில் நான் வேலைகாரனுக க. ஆறுமுகத்தை வைத்துவந்தேன். அவன் நமக்கு மாருய் நடக்கிறதினுல் போலிமருந்துகள் விற்பாரெனறெண்ணி கொழும்பிலிருந்த வைத்தியசாலையை யெடுத்துவிட்டேன். நேராய் நம்மிடம் புத்தகமாவதுசரி மருந்தாவதுசரி கீழேசொல்லிய விலாசத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

## கோகசாஸ்திரம்.

இந்தப்புத்தகம் லோகபிரயோஜனத்திற்காக சிலகாலம் இவ் லோகத்தில் நமது நாமம் நிலைநாட்டவேண்டுமென்று ஆவலாகி கோகசாஸ்திரம் கைத்தொழில்போதினி இன்னும் சில புத்தகங்கள் தகப்பன் பிள்ளைக்குச் சொல்லாத விஷயங்கள் தேசநன்மைக்காக வெளிப்படுத்தினேன். சூரியன் பிரகாசத்தினுல் சகல சீவ ஆத்துமாக்களும் சுகமடைவதுபோல் மானுடஜெனம மெடுத்தவர்களுக்கு இந்தப் புத்தககம் அவசியமே எனெனில், வைத்தியசாஸ்திரம், வேதசாஸ்திரம், தர்மசாஸ்திரம் கைத்தொழில்ச்சாஸ்திரம், கொக்கோகத்தின் விஷயங்களும் மேற்சொல்லிய நூல்களின் சாரமெடுத்து செந்தமிழ்ப்பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்தப் புத்தகத்தில் கோக்கோகத்திலுள்ள துர்விஷயங்களும் துர்ப்பாஷைகளும், துர்உருவங்களும் இல்லை. ஆனுலும் கொக்கோவத்திலுள்ள விஷயங்கள் ஸ்திரீபுருஷர்களுக்குப் படிக்கக்கூடிய சிறந்தபாஷையில் அச்சிடப்பட்டது. கர்பத்திலிருந்துபிறந்தகாலத்திருந்து மரணகாலபரியந்தம் மானுடர் செய்யும்விஷயங்கள் எல்லாங் கூறப்பட்டது. இந்தப் புத்தகத்தில் அடங்கிய விஷயங்கள் பத்திரிகையில் சுருக்கிக் கூறுகிறேன்,

ஸ்திரீ புருஷர் பேதாபேதமும் பொருத்தமும்
காலை மாலை செய்யுங்கருமங்கள்
ஸ்திரீபுருஷர் சரீரத்தில் காமதேவன்சுழன் றவரும் ஸ்தானதகின் காலங்கள் விபரம்
பஞ்சபூதலக்ஷணம்
சரீரஇரக்ஷணைவிதிகள்
பலஔஷதங்கள்செய்யும்முறை
சாம்பிராணிப்பதங்கம் செந்தகப்கோப்பை செய்யும் முறை
நாக்குரோதிரப்பரிக்ஷை
மூத்திரப்பரிக்ஷை
அனேக மிட்டாய்கள் லொசெஞ்ஜர் சர்பதுக்கள் செய்யும் முறை
சில இங்கிலீஷ்செண்ட்ஸ் ரசனைத்திரவியங்கள்செய்யும்முறை
திறமான எடிக்கலோன் செய்யும்விதம்
வாணவேடிக்கைகள செய்யும்விதம்
சாபின்விஸ்கோத செய்யும்விதம்
பிரசவித்த ஸ்திரீகளுக்கு சரீரத்திற்கு கியாழம்செய்யும்விதம்

இவ் விதமாய் அனேக விஷயங்கள் அடங்கியிருக்கின்றது. வாங்கிப் பார்த்தீர்களேயானுல் குரு இல்லாமல் விஷயங்கள் கற்றுக்கொள்ளலாம். இப் புத்தகத்தைப்பற்றி தமிழ்ப்பத்திரிகைகள் கூறுகின்றது. இப் புத்தகம் இலங்கை கவர்மேண்ட்டிடம் றிஜிட்டர் செய்யப்பட்டது. ஒருவரும் அச்சிடககூடாது. அப்படி அசசிட்டால் நமது நஷ்டங்களைக் கொடுக்கவேண்டிவரும். இப் புத்தகத்தின முன்விலை ரூபா மூன்று. தற்போது தேசநன்மைக்காக, இரண்டரைரூபாவுக்குக் கொடுக்கப்படும். தபாற்செலவு அணு 4.

## கஸ்தூரித் திராவகம்.

இந்தத் திராவகத்தில் ஒருநேரத்துக்கு மூன்று சொட்டுவீதம் ஒரு ஒயினகிளாஸ் தண்ணீரில் விட்டுக் காலை, மாலை இரவு படுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட சீரழிவினுல் தாங்கமுடியாத வருத்தத்தை மூன்று நாளையில் சுகமாக்கும். 40-நாள் மருந்துசாப்பிட்டால் வியாதி நன்றாய்ச் சொஸ்தமாகும். தருணவயசுடையவர்கட்கு இது மிகவும் சோத்தியான திராவகம். இதன் விலை அரை அவுன்சக்குக்கு ரூபா 10. இதற்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது. தபாற்செலவு பிரத்தியேகம்.

## துஜ்ஜிபங்க தைலம்.

இதன் சிறந்த குணத்தை இங்கு விரிப்பின் மிகப் பெருகுமாதலால், என்னிடத்தில் நேரிலாவது, கடிதமூலமாயாவது விபர மறிந்துகொள்ளவும். ஒருஅவுன்ச தைலத்தின்விலை ரூபா 2. தபாற்செலவு பிரத்தியேகம்.

## வீரியஸ்தம்பனக்குளிகை.

ஆச்சரியம்! மிக்க ஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒருகுளிகையில் தெரியும். இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத் தேவையில்லை. 2-குளிகைக்குக்குறைய அனுப்பப்படமாட்டா. பரீட்சித்தவர்களே இதன் சுகத்தை அனுபவிப்பார்கள் 12-குளிகையின்விலை ரூபா 2. தபாற்செலவு அணு 4. இதன் குணத்தையும் என்னிடத்தில் காகிதமூலமாயாவது, நேரிலாவது விபரமறிந்துகொளளவும்.

—கெங்காதரதைலம்—பக்கவாய்வுக்குக் கைகண்ட உண்மையானமருந்து. இதன்விலை ஒருஅவுன்சுக்கு ரூபா 5

—மஹாநாராயணதைலம்—வாய்வுகள், சுபாலபீனிசம் முதலானதுக்கு கைகண்டது. ஒருஅவுன்சுக்கு ரூபா 1. மேற்கண்டமருந்துகளுக்குத் தபாற்செலவு பிரத்தியேகம்.

## காமவிலாசலேகியம் அல்லது சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் லோகநன்மைக்காக பிரசுரித்திருக்கிறேன். ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுல் உண்டாகும் நன்மை, சுகம் முதலியவைகளை அடையும்படி பொதுஜனநலத்தைக் கருதியே இப்பொழுது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி குங்குமப்பூ சிலாஜித் கஸ்தூரி குமாஸ்தகா பீதானு சாலாமுஸ்லிசப்முத்ஸலி பிஸ்தாஸ் சார்ப்பருப்பு பாதம்பருப்பு சதாவாரி நீர்முள்ளிவிரை நாகப்பூ வங்கபஸ்பம் அபரகபஸ்பம் பவளபஸ்பம் வெள்ளிபஸ்பம் அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப்பதங்கம் இன்னுமனேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச்செய்யப்பட்டிருக்கிறது. இதனுல் சீரழிவு வெள்ளை நீர்மாவு சுண்ணும்பு கரைத்ததுபோல் வெள்ளையாய்ப்போகுதல் நீர்க்கடுப்பு நீரடைப்பு மூலக்குடு ஒருவருக்குத்தன் உண்டாயிருக்கும் பக்கவாய்வு இருமல் காசம் பித்தம் காமாலை பித்தபாண்டு பீனிசம் கைகால்வலி இடுப்புவலி பக்கவாய்வு குலவாய்வு இன்றுமனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் குதகவாய்வு பிரசவஅறையில் உண்டாகும் பலநோய்கள் தீர்ந்து. தேகபுஷ்டியையும் பலத்தையுந்தரும் பாலைவிர்த்திசெய்யும்.

சிலர் சூறணம் லேகியங்களால் சகல நோயுந்தீர்ந்து 80-வயதுள்ள முதியோரை யௌவனர்களாக்குமென்றும் சந்தானமில்லாத ஸ்திரிகள் கற்பணியாவார்களென்றும் பலவாறு விளம்பரங்களைப் பிரசுரிக்கிறார்கள். அவ்விதம் பிதற்றவும் பொய்சொல்லவும் என்மனச்சாட்சி எனக்கு இடங்கொடுக்கிறதில்லை. ஆனுல் கர்ப்பந்தரிப்பதற்குத் தக்க ஔஷதம் என்னிடமுண்டு இஷ்டமுள்ளவர்கள் ஆதியோடந்தமாய் அப்பேர்ப்பட்ட ஸ்திரிகளின் தேககுணங்களைத் தெரிவித்து ஔஷதத்திற்கு வேண்டிய பணமுஞ் செலவழிப்பார்களாகில் நான் ஔஷதப்பிரயோகஞ் செய்யககூடும். இதைப் புருஷர்கள் பெரிய களாச்சிக்காய்ப் பிரமாணமும் ஸ்திரீகள் சிறிய களாக்காய்ப் பிரமாணமும் புதிய வியாதிகளுக்கு 21-நாளும் பழைய வியாதிகளுக்கு 44-நாளும் அந்தந்த வியாதிகளுக்கு மருந்து எடுக்கப்படும்போது நம்மால் தெரிவிக்கப்படும் அனுமானத்துடன் சாப்பிடவேண்டும். விலை றூத்தலொன்றுக்கு ரூ. 20. கால் றூத்தலுக்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது. புருஷர்களுக்கு 40-நாளைக்கு ஒருறூத்தல் போதுமானது. ஸ்திரீகட்கு முக்கால் றூத்தல் இது சாப்பிடுவதற்கு வெகு இன்பமும் குணமுமாயிருக்கும். இதில் லாகிரியே கிடையாது. எடுக்க இஷ்டமுள்ளவர்கள் வியாதியின் விபரத்தைக் கடிதமூலமாய்த் தெரிவித்து அத்துடன் 8-அணு ஸ்டாம்பும் அனுப்பவேண்டியது. அல்லாவிட்டால் லேகியம் அனுப்பப்பட மாட்டாது.

எமது விலாசம்.

ஆதிஆயுர்வேத அரோகசுதகர் வைத்தியசாலை.
மகாராஜ கெங்காபிரசாத் பண்டிதர்,
சிரிக்கிமுஹால்
கான்பூர்.

---

ஆதிரு தடக்தோழ்வாழ்க அறுமுகம வாழக வெற்பைக், கூறுசெய் தனிவேல்வாழ்கக் குக்குடம் வாழ்கச்செவ்வேழ், எறிய மஞ்ஞைவாழ்க யானைதன் னணங்குவாழ்க, மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசி ரடியரெல்லாம்.

---

PrinT,ed and published by M. S. Manicam Pllai FoP, the Proprieter atThe SRI Val ampiaPress Jaffna.